# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2110/50 - 2019 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2019.02.15

*2110/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KEG/LAN/AQUIS/A3/1/96a.
காணி அமைச்சின் இல.: 4/3/5/2014/HW/64.

கேகாலை மாற்று வீதியில் 111 ஆம் கட்டத்திற்காக மேலதிக காணி எடுப்பதற்குத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தினாற் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், கேகாலை பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 51ஈ கொலஹெல கிராம அலுவலர் பிரிவில் கேகாலை நகர சபை எல்லையினுள் அமைந்துள்ள கேகாலை நில அளவை அத்தியட்சகரின் ஆ.வ.கே. 3666 இலக்கம் கொண்ட வரைபடத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 01 காணித் துண்டாகும்.

**பரிசீலனைத் திகதி : ஆ. வ. கே. 3666 இல்**

துண்டு இலக்கம் : 01

**துண்டு இலக்கம் : 01**

காணியின் பெயர்: ஆதன வரி இலக்கம் 252, பண்டாரநாயக்க மாவத்தை; உரிமை கோருபவர்: C.N.C மனதுங்க, இலக்கம் 252, பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை; விஸ்தீரணம்: 0.0140 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019.03.21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேகாலை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங் களையும் 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எஸ். நிஷாந்த,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் அலுவலர்,
கேகாலை.

பிரதேச செயலகம்,
கேகாலை,
2019, பெப்புருவரி 12.

03 - 206


1A - G 29472 - 17 (2019/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களதில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.